இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 119 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 23 – ஞாயிற்றுக்கிழமை 08 டிசம்பர் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 119: Thiruvalluvar Year - 2055 - Karthigai 23 - Sunday 08 December 2024 - Chennai 16 Pages ₹ 5.00

### சென்னை – கிளாம்பாக்கம் அருகே முடிச்சூரில் – உணவகங்கள், தங்குமிடங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன்

# ரூ.42.70 கோடியில் ஆம்னி பேருந்து நிலையம்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூரில் 42.70 கோடி ரூபாய் செலவில் ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்துமிடம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் 15 கோடி ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு காலநிலைப் பூங்கா மற்றும் சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மையம், என மொத்தம் 58 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, அப்பல்லோ மருத்துவமனையின் துணைத் தலைவர் திருமதி ப்ரித்தா ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 8–**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.58.70 கோடி செலவிலான 3 முடிவுற்ற பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூரில் 42.70 கோடி ரூபாய் செலவில் ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்துமிடம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் 15 கோடி ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு காலநிலைப் பூங்கா மற்றும் சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மையம், என மொத்தம் 58 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 3 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்டமிடல் தேவை என்பதை உணர்ந்து 1972ல் மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாற்றப்பட்டது. சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மூன்று முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதன் விவரங்கள்:

**முடிச்சூரில் ஆம்னி பேருந்துகளுக்கான நிறுத்துமிடம்!**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முடிச்சூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் 42.70 கோடி ரூபாய் செலவில் தனியார் ஆம்னி பேருந்துகளை நிறுத்துவதற்கான நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிறுத்துமிடத்தில் உணவகங்கள், தங்குமிடங்கள், ஒப்பனை அறைகள் போன்ற பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளுடன், ஒரே நேரத்தில் 150 பேருந்துகள் நிறுத்துகின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆம்னி பேருந்து நிறுத்துமிடத்தில் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகள் நிறுத்தப்படும்.

**கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு காலநிலைப் பூங்கா**

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அருகில் சுமார் 16 ஏக்கர் நிலப்பரப்பில் 15 கோடி ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு காலநிலைப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தொல்லியியல் விளக்க மையம், அகழிகள், மழைநீர் குளங்கள், உயர்மட்ட நடைபாதை, மரத்தோட்டம், சிறுவர் விளையாட்டு பூங்கா, சிலைகள் பூங்கா விளையாட்டு மைதானம், திறந்தவெளி அரங்கம் மற்றும் கண்காட்சி மேடைகள் என பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

**சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மையம்!**

சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 1 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் மருத்துவர்கள் ஆலோசனை அறை, செவிலியர்களுக்கு தனி அறை, 3 மருத்துவ படுக்கை வசதிகளை உள்ளடக்கிய அவசர சிகிச்சைப் பிரிவு, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருந்தகம், 50 நபர்கள் ஒரே நேரத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில் காத்திருப்புக் கூடம், ஒப்பனை அறைகள், மருத்துவ அவசர ஊர்திகள் நிறுத்துமிடம், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் என அனைத்து சிறப்பம்சங்களுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவ சிகிச்சை மையத்தின் மூலம்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### ஃபெஞ்சல் புயல் பாதிப்பு:

## விழுப்புரம் மாவட்டத்தில் ஒன்றிய அரசின் குழு ஆய்வு!

### பயிர்ச் சேதங்கள் குறித்து விவசாயிகள் முறையீடு!

விழுப்புரம், நவ. 8 -

ஃபெஞ்சல் புயல் பாதிப்பு தொடர்பாக விழுப்புரம் மாவட்டத்தில் ஒன்றிய அரசின் குழுவினர் நேரில் ஆய்வு செய்து வருகின்றனர். தனித்தனி குழுக்களாகப் பிரிந்து ஒன்றிய அரசின் குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

ஃபெஞ்சல் புயலால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்து ஆய்வு செய்ய ஒன்றிய அரசின் பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் ராஜேஷ் குப்தா தலைமையில் 7 பேர் கொண்ட குழு தமிழகம் வந்துள்ளது.

இந்தக் குழுவினர் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று சந்தித்து புயல் பாதிப்புகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

அதன்படி, ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் பொன்னுசாமி, ஒன்றிய விவசாய மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர் சோனாமணி அவுபம், ஒன்றிய நிதித் துறை இயக்குநர் சரவணன் உள்ளிட்ட ஒன்றிய அரசின் குழுவினர் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

விக்கிரவாண்டியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கன மழையால் சேதமடைந்த நெல் மணிகளை ஒன்றிய குழுவினர் பார்வையிட்டனர்.

மேலும், தங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து அதிகாரிகளிடம் விவசாயிகள் எடுத்துக் கூறினர்.

### ரூ.76 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்! பல்வேறு அரசுத் துறைகள் சார்பில்

# வேலூரில் 4,844 பயனாளிகளுக்கு ரூ.129 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!



**வேலூர், டிச.08–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.12.2024) வேலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் ரூ.75.95 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, வேலூர் மாவட்டத்தில் உள்ள 247 ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு பொருட்கள் அடங்கிய 345 விளையாட்டு உபகரண தொகுப்புகளையும், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று நடைபெற்ற விழாவில் பொதுப் பணித்துறை யின் சார்பில் ரூ.72.61 கோடி மதிப்பில் 9 பள்ளிகளில் வகுப்பறை கட்டடங்கள், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வேலூர் நகரத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 250 படுக்கை வசதியுடன் கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு கட்டடம், கருவூல கட்டடம், சார்பதிவாளர் அலுவலகம் என 12 திட்டப் பணிகளுக்கும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.3.34 கோடி மதிப்பில் 1 எல்.பி.ஜி மயான பூமி, 2 பள்ளிகளில் வகுப்பறை கட்டடங்கள், 1 பல்நோக்கு கட்டடம், 1 பேருந்து பயணியர் நிழற்குடை உள்ளிட்ட 5 திட்டப் பணிகள் என மொத்தம் ரூபாய் 75.95 கோடி மதிப்பில் 17 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.5.48 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 8 கட்டடங்களையும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட துறையின் சார்பில் ரூ.89 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 7 அங்கன்வாடி மையங்களையும், ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் ரூ.5.05 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், நியாய விலைக் கடை உள்ளிட்ட 16 முடிவுற்ற திட்டப் பணிகளையும், பொது சுகாதாரத் துறையின் சார்பில் ரூ.1.46 கோடி மதிப்பில் 4 சுகாதார நிலையங்களையும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் ரூ.1.40 கோடி மதிப்பில் டிராக்டர் பணிமனையையும் என மொத்தம் ரூ.14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 கட்டடங்களை இன்று திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வேலூர் மாவட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 2,761 பயனாளிகளுக்கு ரூ.70 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 208 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி மதிப்பில் கலைஞர் கனவு இல்லம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டங்களின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத் துறையின் சார்பில் 440 பயனாளிகளுக்கு ரூ.38.26 கோடி மதிப்பில் கடன் உதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 602 பயனாளிகளுக்கு ரூ.7.40 கோடி மதிப்பில் கடன் உதவிகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 169 பயனாளிகளுக்கு ரூ.76.83 இலட்சம் மதிப்பில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் உள்ளிட்ட உபகரணங்களையும், சமூக நலத்துறையின் சார்பில் 250 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி வைப்பு தொகை உள்ளிட்ட நல திட்டங்களையும், சுகாதார துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 12 பயனாளிகளுக்கு ரூ.21.60 இலட்சம் மானியத்தில் டிராக்டர், பவர் ட்ரில்லர் உள்ளிட்ட வேளாண் உபகரணங்களையும், மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.12.50 இலட்சம் மதிப்பில் கறவை மாடுகளையும், வேளாண்மை துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.6.66 இலட்சம் மதிப்பில் சுழலும் கருவி, மண்புழு உரபடுக்கை உள்ளிட்ட வேளாண் கருவிகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.1.23 இலட்சம் மதிப்பில் சொட்டுநீர் பாசன கருவிகளையும், சிறுபான்மை நலத்துறையின் சார்பில் 107 பயனாளிகளுக்கு ரூ.0.79 இலட்சம் மதிப்பில் தையல் இயந்திரம் மற்றும் நலவாரிய அட்டைகளையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.12.63 இலட்சம் மதிப்பில் விவசாய மின் இணைப்பு ஆணைகளையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு ரூ.5.53 இலட்சம் மதிப்பில் தொழிலாளர்களுக்கு நிதியுதவியும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளையும் என மொத்தம் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார் (அணைக்கட்டு), ப.கார்த்திகேயன் (வேலூர்), திருமதி அமுலுவிஜயன் (குடியாத்தம்), ஜே.எல்.ஈஸ்வரப்பன் (ஆற்காடு), அ.செ.வில்வநாதன் (ஆம்பூர்), வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாபு, துணை மேயர் மா.சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி த.மாலதி மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.